

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியம், கோவூரில் புதிய பேருந்து வழித்தடங்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்து, பேருந்தில் பயணம் செய்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக்குழுத் தலைவர் சரஸ்வதி மனோகரன், துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம், ஊராட்சி மன்ற தலைவர் பா.சுதாகர், ஒன்றிய குழு உறுப்பினர் க.அன்பழகன் ஆகியோர் உள்ளனர்.



அகில இந்திய கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா நலவாரியங்களில் அனைத்து தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நடத்திய பாராட்டு விழாவில் அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவது குறித்து பேசினார்.

### ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில்

# ‘என் உயிரினும் மேலான’ கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் சான்றிதழை வழங்கினார்!

திருப்பூர், ஆக. 22 - ஒருங்கிணைந்த திருப்பூர் மாவட்ட இளைஞர் அணி சார்பில் என் உயிரினும் மேலான.../. கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகள் கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் முதற்கட்ட போட்டிகள் என்றென்றும்

பெரியார் ஏன்? அண்ணா கண்ட மாநில சுயாட்சி, கலைஞரின் தொலை நோக்குப் பார்வை, கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி, இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம், சமூக நீதி காவலர் கலைஞர், தமிழ்நாட்டு குடும்பங்களில் தி.மு.க., பேசி வென்ற இயக்கம், திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆகிய 10 தலைப்புகளில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் 18 வயது முதல் 35 வயதுடைய 100க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். போட்டிகளின் நடுவர்களாக கம்பம் செல்வேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, குத்தாலம் அன்பழகன், பிரசுதீஸ்வரன், ஆண்டாள் பிரியதர்ஷினி, செந்தில்வேல் ஆகியோர் கலந்து கொண்டு சிறந்த பேச்சாளர்களை தேர்வு செய்தனர். கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் மேற்பார்வையாளராக கலந்து கொண்டார்.

இந்த போட்டிகளில் கலந்து கொண்டவர்களுக்கு கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கையொப்பமிட்ட சான்றிதழை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார்.

இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாதன், மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா. ஜெயராமகிருஷ்ணன், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் மு.ஜெயக்குமார் திருப்பூர் தெற்கு, ஈ.தங்கராஜ் திருப்பூர் வடக்கு, மாநகர அமைப்பாளர்கள் சு.முத்துக்குமார் திருப்பூர் வடக்கு, எம்.எஸ்.ஆர்.ராஜ் (எ) மணிகண்டபிரபு திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு மாவட்ட துணை அமைப்பளர்கள் த.சசிகுமார், ப.ரவிச்சந்திரன், செ.ராஜசேகர், மு.முகமது ஜினைத், சசிகுமார் (எ) த. ஞானசிகாமணி, ஈ.பாலசுப்பிரமணியம், உ.லி ங்கேஸ்வரன், திருப்பூர் தெற்கு மாவட்ட துணை அமைப்பாளர்கள் கே.கே.ரவிச்சந்திரன், வழக்கறிஞர் ச.யுவராஜ், த.ஆரோன் செல்வராஜ், ந.வீரகாளி வெங்கடேஷ், சா.கவியரசு, என்.எஸ்.கே.சிவக்குமார், வடக்கு மாநகர துணை அமைப்பாளர்கள் ஆ.வஞ்சிமுத்து, த.சந்திரசேகர், ச.பாண்டிதுரை, அ.பார்த்திபன், நா.தியாகு, தெற்கு ம.அசோக்குமார், கா.சையது அபுதாஹிர், மு.விக்னேஷ்குமார்,

க.திருநாவுக்கரசு, கு.அரவிந்த், ர.தமிழரசு, திருப்பூர் தெற்கு மாவட்ட கழக துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் சந்திரசேகர் வெள்ள கோவில், துரை தமிழரசு மூலனூர், நகர கழக செயலாளர்கள் எஸ்.முருகா னந்தம் தாராபுரம், சபரி எஸ். முருகா னந்தம் வெள்ள கோவில், கிருஷ்ணமூர்த்தி திருமுரு கன்பூண்டி, நகராட்சி தலைவர் குமார், ருத்ராவதி பேரூர் கழக செயலாளர் அன்பு,

வீரபாண்டி பகுதி கழக செயலாளர் கோவிந்தராஜ், மாநகராட்சி சுகாதாரக் குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன், வட்ட கழக செயலாளர் நேதாஜி கண்ணன் உள்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வார்டு கழக, கிளைக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. ஆட்சியின் மூன்றாண்டு காலத்தில்

# அமைப்புசாரா நலவாரியங்களில் 1848 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் தகவல்!

சென்னை, ஆக. 22 - அகில இந்திய கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா நலவாரியங்களில் அனைத்து தொழிற்சங்களின் கூட்டமைப்பு நடத்திய பாராட்டு விழாவில் அமைச்சர் சி.வெ.கணேசன் பேசியதாவது:

தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் 20 அமைப்புசாரா நலவாரியங்களில் 1848 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிகள் 23,70,288 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மேலும், 27 நலத்திட்டங்களின் உதவித் தொகையை அதிகப்படுத்தி முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மேலும், வாரியங்களில் சர்வரில் உள்ள தகவல்கள் மாயமானதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். அது தவறான செய்தி ஆகும். சர்வரில் உள்ள தரவுகள் மாயமானதாக கூறப்படும் காலத்தில் மட்டும் (01.12.2023 முதல் 19.08.2024 வரை) 1,79,719 தொழிலாளர்கள் புதிதாக பதிவு செய்துள்ளனர்.

13,76,618 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

சர்வரில் உள்ள தரவுகள் மாயமானால் இலட்சக்கணக்கான பயனாளிகளுக்கு எவ்வாறு நலத்திட்ட உதவிகள் சென்றடைந்திருக்கும் என்ற கேள்வியை எழுப்பினார்.

மேலும், 3,55,169 நபர்கள் மாத ஓய்வூதியமாக ரூ.1,200 பெற்று வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் மேல்மலையனூரில் நடைபெற்ற அரசு விழாவில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர்செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு கலைஞர் கனவு இல்லம் வீடு கட்டும் திட்டத்தில்167 பயனாளிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான உத்தரவுகளை வழங்கினார் .உடன் மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன் ஆகியோர் உள்ளனர்.

# நாகை மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை, ஆக. 22 - கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க நாகை மாவட்ட தி.மு.க. மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள். ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள்,தலைவர், துணைத் தலைவர்கள் ஆலோசனை கூட்டம் நாகை யாழிசை திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத்தலைவர் ப.செல்வம் தலைமை தாங்கினார். தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், இல.மேகநாதன், க.மறைமலை, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் சோ.ரவிச்சந்திரன், ஆரூர் மணிவண்ணன், கற்பகம், பொருளாளர் மு.லோகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்து நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் பேசினார். கூட்டத்தில் மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், மகா.குமார், கே.பழனியப்பன், செல்வ.செங்குட்டுவன், ஆர்.டி.எஸ்.சரவணன், சிக்கல் என்.ஆனந்த், சோ.பா.மலர்வண்ணன், என்.சதாசிவம், உதயம் வே.முருகையன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, எம்.ஆர். செந்தில்குமார், மா.மீ.புகழேந்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.பன்னீர்செல்வம், எஸ்.பி.டி.சார்லஸ், எல்.எஸ்.ஈ.பழனியப்பன், உமாசெந்தாமரை, எம். பாண்டியன், கோசி. குமார், இல.பழனியப்பன், பேரூர் கழகச் செயலாளர்கள் முகமதுசுல்தான், மரிய சார்லஸ், கா.அட்சய லிங்கம், மாவட்ட சார்பி அணி அமைப்பாளர்கள் பி.என். கார்த்தி, அ.பாரிபாலன், இரா.முருகையன், எஸ். பால்ராஜ், ஆர்.சுரேந்தர், த.மயந்தி, ப.உதயக்குமார், கே.எஸ்.சாகுல்ஹமீது, ஆர்.ஆர்.குலோத்துங்கன், மு.தினோஷ்குமார், எஸ். புவனேஷ்வரி, ஆர்.ஏ.டி. அண்ணாதுரை, பெ.முருகானந்தம், க.சத்தியமூர்த்தி, வி.கமல், கேஸ் வி.செந்தில், எஸ்.வி.டி.அருள், இளம்.சுந்தர், எஸ்.பாலமுருளி மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற் றப்பட உள்ள தீர்மானங்கள்

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க நாகை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் பகுயில் உள்ள கிளை, வார்டுகள் தோறும் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்திட வேண்டும், அதைத் தொடர்ந்து ஒன்றிய, நகர, பேரூர் பொது உறுப்பினர்கள் கூட்டத்தை நடத்திட வேண்டும் என்றும், இந்த கூட்டத்தில் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் பகுதியை சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதி நிதிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்றும், கூட்ட ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் கூட்டங்கள் குறித்து நோட்டீஸ் அச்சடித்து கழகத்தினர் அனைவருக்கும் வழங்கி கூட்டங்களை சிறப்பாக நடத்திட வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறை வேற்றப் பட்டன.




கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தொ.அ.ரவி தலைமையில் டாடாபாத்தில் உள்ள கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. வடக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர்கள் அசோக்பாபு, ஆறுக்குட்டி ,ஜெயந்தி, எம்.என். செந்தில் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாநில விவசாய தொழிலாளர் அணி துனைச்செயலாளர் அருண்குமார் மாநில தீர்மானக்குழு உறுப்பினர் முத்துசாமி மாநில மகளிர் தொண்டரணி துணைச்செயலாளர் மாலதி, சுற்றுச்சூழல் அணி மாநில துணைச்செயலாளர் மணி சுந்தர், நாகராஜ் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண்முகசுந்தரம், சுப்ரமணியம், அஸ்ரப் அலி, சோமு என்கிற சந்தோஷ் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் பகுதிக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.


ஆகஸ்ட் 22. 2024



19 - ஆம் ஆண்டு நினைவு நாள்!



மொழிப்போர் தியாகி, மக்கள் தொண்டர்

க.சொ.கணேசன் Ex.MLA அவர்கள்

தோற்றம் : 03-06-1941 மறைவு : 22-08-2005

ஆளுயர மாலையும்; ஆரத்தழுவும் மரணத்தையும்
ஒருசேரக் கருதி கழகத்திற்காக கடைசிவரை உழைத்தவரே...
உதயசூரியனில் கலந்துவிட்ட எந்தையே; நின் காலடிச் சுவடயே;
அரிச்சுவடியாய் கொண்டு மக்கள் பணியில் பயணிக்கும்...

க.சொ.க.கண்ணன் M.Com., மற்றும் குடும்பத்தினர்கள்
சட்ட மன்ற உறுப்பினர், ஜெயங்கொண்டம்,
தமிழ்நாடு சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வுக்குழு உறுப்பினர்,
ஒன்றியக் கழகச் செயலாளர், தா.பழூர் கிழக்கு.

ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி தி.மு.க
அரியலூர் மாவட்டம்.